

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வாய்க்கால் மேடு பகுதியில் பனை விதை நடும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார். நிகழ்வில் துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கோவை அவினாசி சாலையில் உள்ள ஜென்னிஸ் ரெசிடென்சியில் உள்ள டையமண்ட் ஹாலில் நடைபெற்ற, மேற்கு மண்டல திமுக சுற்றுச்சூழல் அணி “சுற்றுச்சூழல் விருதுகள் 2024” வழங்கும் விழா, அயலக தமிழர் நல வாரியதலைவர், திமுக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு வாழ்த்தி, சிறப்புரையாற்றினார். திமுக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர்கள் ந.மணிசுந்தர், மா.நாராயணமூர்த்தி வரவேற்புரையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், தமிழ்நாடு வன உயிரின வாரிய உறுப்பினர் ஓசை காளிதாஸ், திமுக சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்கள் மாநகர் மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஸ்ரீ சத்யா கோவை தங்கம், ராமச்சந்திரன், கார்த்திக் குமார், விஜயகுமார், பி.ஏ.சேகர், தண்டபாணி, கேபிள் விஜய்,இளங்கவி, கே.கே.செல்வம், இமயம் சிவகுமார், விநாயகமூர்த்தி, ரவிச்சந்திரன், நல்லுசாமி, திமுக சுற்றுச்சூழல் அணி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட அனைத்து மாவட்ட துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்டத்தில், உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு,

# விழிப்புணர்வு நடைபயணம் - வாகனப் பேரணி!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

*நீலகிரி, செப். 29 -*

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்திலிருந்து, உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, நீலகிரிஸ் ஹோட்டல் ரெஸ்டாரன்ட் அசோசியேஷன் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபயணம் மற்றும் வாகனப் பேரணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (27.09.2024) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பேரணியில் ஜெம் பார்க், மொனார்க், பிரீத்தி கிளாசிக் டவர், துர்கா, நஹார் உள்ளிட்ட ஹோட்டல்களின் உரிமையாளர்கள் உட்பட ஏறத்தாழ 300 நபர்கள் பங்கு பெற்றனர். உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் தொடங்கிய பேரணியானது, ஆனந்தகிரி சென்று நிறைவு பெற்றது.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதிகபடியாக நிதிஒதுக்கீடு செய்து வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் உலக சுற்றுலா தினம் செப்டம்பர் 27ம் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒரு கருப்பொருளை மையப்படுத்தி அதன் முக்கியத்துவத்தை உலகம் முழுவதும் பரப்பி வருகிறது. அதன்படி, இந்த ஆண்டு சுற்றுலாவும் அமைதியும் என்கிற கருப்பொருளை அறிவித்துள்ளது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக கொண்டு வர வேண்டும் என பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். அதன் ஒரு பகுதியில் நமது மாநிலத்தின் பொருளாதார பங்கில் 7 சதவீதம் சுற்றுலாவை சார்ந்துள்ளதால், சுற்றுலா கொள்கை 2023ஐ வெளியிட்டு, அதன்படி 300 சுற்றுலாத் தளங்களை மேம்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள்.

**இரவிலும் கண்டு மகிழலாம்!**

அதன்படி, கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.12.92 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் செய்யும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடத்தை ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், பிச்சாவரம் சுற்றுலாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அதேபோல், கொல்லி மலை, நீலகிரி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலை மற்றும் தென்னிந்தியாவின் ஸ்பா என்று அழைக்கப்படும் குற்றாலம் ஆகிய மலைப்பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர் வீழ்ச்சி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரை, திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரி உள்பட தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில், மருத்துவ சுற்றுலா, கடற்கரை சுற்றுலா, கிராமிய சுற்றுலா உள்ளிட்ட 12 சுற்றுலா பிரிவுகளில் அனைத்து சேவைகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாத்தளங்களை பொறுத்தவரை அங்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு ஏற்படுத்தி தரும் தங்கும் வசதி, அவர்களுக்கு வழங்கப்படும் மரியாதையினை பொறுத்து, சுற்றுலா பயணிகள் அவர்களது சுற்றுலா நாட்களை அதிகபடுத்துவார்கள். நமது மாவட்டத்தில் அதிகளவில் சுற்றுலாத்தளங்கள் உள்ளதால், வெளியூர் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள். சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து வந்தால் மட்டுமே நமது மாவட்டத்தின் பொருளாதாரம் மேம்படும். எனவே, அவர்களை நல்ல மரியாதையுடன் வரவேற்க வேண்டும். நமது மாவட்டத்தில் சுற்றுலா பயணிகள் தங்கும் நாட்களில் அவர்கள் மகிழ்ச்சியுடன் மனத்திருப்தி அடையும் வகையில் வழிநடத்த வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் காவல் காணிப்பாளர் சௌந்தரராஜன், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், மாவட்ட சுற்றுலா அலுவலர் திருமதி.துர்கா தேவி, உதகை வட்டாட்சியர் சரவணகுமார், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், தனியார் ஹோட்டல் சங்கத்தின் உறுப்பினர்கள், தொண்டு நிறுவனத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தர்மபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டிமேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட போதக்காடு ஊராட்சியில் கழக அரசின் பழங்குடியின மக்களுக்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 19 நபர்களுக்கு ரூ.6.65 லட்சம் மதிப்பீட்டில் கறவைமாடுகள் வழங்கப்பட்டன. மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி கழக பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளரும், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக்குழு உறுப்பினருமான பி.எஸ்.சரவணன் முன்னிலையில் மாவட்ட திட்ட அலுவலர் கண்ணன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் வட்டாட்சியர் ஜெயசீலன்,கால்நடை மருத்துவர் மெகபூப்கான்,மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக்கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண் பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் , 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல் நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியல் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6,மற்றும் 6பி,7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களில் சேர்க்கலாம்.

பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்க வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய10 அல்லது12 ஆம் வகுப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்காக இணைய தள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி (voter helpline mobile app) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப் பணிகளில் கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அந்தந்த வாக்குச்சாவடி நிலைமுகவர்களுடன் (BLA-2) இணைந்து மேற்கண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பா.சா.பன்னீர்செல்வம்

**செப்டம்பர் 29 (2014)**



**கழக முன்னோடிகளில் ஒருவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த மா.பா.சாரதி அவர்களின் மகன். தலைமை செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், கூட்டுறவு கட்டிட சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இரண்டுமுறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. முனியசாமி

**செப்டம்பர் 29 (2009)**



**இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தமிழ்நாட்டு மக்களின் நலன்காக்க

# 3 கோரிக்கைகளையும் பிரதமர் நிறைவேற்றுவார் என நம்புகிறேன்!

## புதுடெல்லியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**புதுடெல்லி, செப். 29 -**

**தமிழ்நாட்டு மக்களின் நலன்காக்க பிரதமரிடம் நேரில் வலியுறுத்திய 3 கோரிக்கைகளையும் அவர் நிறைவேற்றித் தருவார் என்று நம்புவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் புதுடெல்லியில் செய்தியாளர்களுக்கு அளித்தப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.09.2024) புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி. வருமாறு:-

டெல்லி ஊடகவியலாளர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சந்திப்பதற்காக நேற்று டெல்லிக்கு வந்தேன். இன்றைக்கு காலையில் பிரதமர் அவர்களை சந்தித்தேன். இந்த சந்திப்பு, இனிய சந்திப்பாக அமைந்தது. பிரதமர் அவர்கள் எங்களிடம் மகிழ்ச்சியுடன் பேசினார். இந்த மகிழ்ச்சியான சந்திப்பு பயனுள்ள சந்திப்பாக மாற்ற வேண்டியது பிரதமர் அவர்களுடைய கையில்தான் இருக்கிறது.

**தலைப்புச் செய்தி!**

ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று மூன்று முக்கியமான கோரிக்கைகளை நான் அவரிடத்தில் வலியுறுத்தி இருக்கிறேன். தலைப்புச் செய்திகளாக நான் சொன்னாலும், அதனுடைய சாராம்சம் முழுமையாக, தெளிவாக எங்களுடைய கோரிக்கைகளை நாங்கள் எழுதி அவரிடத்தில் நாங்கள் ஒப்படைத்திருக்கிறோம். தலைப்புச் செய்திகளாக நானும் உங்களிடத்தில் சொல்ல விரும்புவது,

**மெட்ரோ ரயில் திட்டப் பணிகள்!**

முதலில், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் ஒன்றிய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தியது போலவே, இரண்டாவது கட்டப் பணிகளையும் செயல்படுத்தவேண்டும் என்பது தமிழ்நாட்டின் நிலைப்பாடு.

இந்த இரண்டாவது கட்டப் பணிகள் காலதாமதமின்றி மேற்கொள்வதற்காக, 2019ஆம் ஆண்டு, மாநில அரசின் நிதியிலிருந்தும், கடன் பெற்று பணிகளை துவக்கி, பின்பு ஒன்றிய அரசோடு இணைந்து செயல்படுத்தும் திட்டமாக செயல்படுத்துவதற்கு ஒப்புதல் பெறுவதற்கு முடிவு செய்யப்பட்டது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் இதனை ஏற்றுக் கொண்டு, 2020ஆம் ஆண்டில் இதற்கு அடிக்கல் நாட்டி பணிகள் துவங்கப்பட்டது.

ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள், இதற்கான ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கப்படும் என்று 2021-2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்தார். இதைத் தொடர்ந்து, ஒன்றிய அரசின் திட்ட முதலீட்டு வாரியம், இதற்கான ஒப்புதலை, 2021ஆம் ஆண்டே வழங்கியது. இந்தப் பணிகளுக்கு, இதுவரை 18 ஆயிரத்து 564 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருந்தாலும், இதுவரைக்கும் ஒன்றிய அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்படாத காரணத்தால், இதற்கான ஒன்றிய அரசின் நிதி, தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்படவில்லை. இதனால், மெட்ரோ ரயில் திட்டப் பணிகளில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. எனவே, தாமதமின்றி இந்த நிதியை உடனடியாக வழங்கப்படவேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன்.



**ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்!**

இரண்டாவதாக, ஒன்றிய அரசு 60 விழுக்காடு நிதியையும், தமிழ்நாடு அரசு 40 விழுக்காடு நிதியையும் அளித்து செயல்படுத்தக்கூடிய ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின்கீழ், இந்த நிதியாண்டில் ஒன்றிய அரசு வழங்க வேண்டியது 2,152 கோடி ரூபாய். இந்தத் தொகையில், முதல் தவணை இதுவரைக்கும் தமிழ்நாட்டுக்கு வழங்கப்படவில்லை.

இந்தத் திட்டத்தின்கீழ் கையெழுத்திடப்பட வேண்டிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாடு அரசு கையெழுத்திடாததே இதற்குக் காரணம் என்று ஒன்றிய அரசு தெரிவித்திருக்கிறது.

தேசிய கல்விக் கொள்கையின் பல நல்ல கூறுகளை, ஏற்கனவே தமிழ்நாடு அரசு செயல்படுத்திருக்கிறது. செயல்படுத்திக் கொண்டும் வருகிறது.

காலை உணவு திட்டம் போல, மற்ற மாநிலங்களில் செயல்படுத்தப்படாத பல முன்னோடித் திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

ஆனால், தேசியக் கல்விக் குழுவின் ஒரு விதிமுறையான மும்மொழிக் கொள்கையை பின்பற்ற தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளவில்லை. எந்த ஒரு மாநிலத்தின் மீதும், மொழித் திணிப்பு இருக்காது என்று தேசிய கல்விக் கொள்கை உறுதியளித்திருந்தாலும், இந்தத் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதற்கான ஷரத்து இல்லை. எனவே, இந்த ஒப்பந்தம் திருத்தப்படவேண்டும் என்று ஒன்றிய அரசிடம் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

இந்தச் சூழ்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படாத காரணம் காட்டி, ஒன்றிய அரசு நிதியை விடுவிக்காததால், ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமல், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்ற சூழல் உருவாகியிருப்பதை சுட்டிக்காட்டியிருக்கிறோம். உடனடியாக இந்தத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் நிதி அளிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம்.

**தமிழ்நாட்டு மீனவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகள்!**

மூன்றாவதாக, தமிழ்நாட்டு மீனவர்கள் சந்தித்து வருகின்ற வாழ்வாதாரப் பிரச்சனைகள் குறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறோம். Detailஆக சொல்லியிருக்கிறோம். நம்முடைய பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில், மீன் பிடிக்கப் போகும் நம்முடைய மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் சிறைப்பிடித்து துன்புறுத்து கிறார்கள். இதுபற்றி பிரதமரிடமும், வெளியுறவுத்துறை அமைச்சரிடமும் நான் பலமுறை வலியுறுத்தியும், கடிதம் எழுதியும், இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஏழு ஆண்டுகளில் மிக அதிக அளவு எண்ணிக்கையில், இதுமாதிரியான சம்பவங்கள் நடக்கிறது.

191 மீன்பிடிப் படகுகளும், 145 மீனவர்களும் தற்போது இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக நம்முடைய ஒன்றிய அரசு, இலங்கை அரசை வலியுறுத்தி, இந்த மீனவர்களையும், அவர்களுடைய மீன்பிடிப் படகுகளையும் மீன்பிடிக் கருவிகளையும் உடனடியாக விடுவித்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெற இருக்கும், இந்திய இலங்கை நாடுகளுக்கு இடையேயான கூட்டுக்குழு கூட்டத்தில் இதுபற்றி விவாதித்து இதற்கு உடனடியாக தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம்.

இலங்கையில், புதிய அரசு அமைந்திருக்கிறது. புதிய அதிபரிடம் இந்தக் கோரிக்கையை இந்திய ஒன்றிய அரசு வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறேன்.

**பிரதமர் உறுதி!**

இந்த மூன்று முக்கிய கோரிக்கைகளையும் கவனமாக கேட்டுக்கொண்ட பிரதமர் அவர்கள், இதுபற்றி விரைவாக கலந்தாலோசித்து முடிவுகளை தெரிவிப்பதாக உறுதி அளித்திருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்க தேவையான இந்த முக்கிய கோரிக்கைகளை பிரதமர் அவர்கள் நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டிற்கு ஏராளமான கோரிக்கைகள் இருக்கிறது. அதையெல்லாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்; தொடர்ந்து வலியுறுத்தப் போகிறோம். இந்த மூன்று கோரிக்கைகளை மையப்படுத்தித்தான் இந்த சந்திப்பு நடைபெற்றது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொடர்ந்து செய்தியாளர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து பேட்டி அளித்தார்.**

அதன் விபரம் வருமாறு:-

**செய்தியாளர்** - உங்கள் அமெரிக்க பயணத்திற்கு டெல்லி தமிழ் பத்திரிகையாளர்கள் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றியதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கட்டப்பட்டு வரும் புதிய தமிழ்நாடு இல்லத்தில் கலைஞர் நினைவாக எங்களுக்கு ஒரு புதிய அறை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - நன்றி, உங்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டது 45 நிமிடங்கள் பேசினோம்!**

**செய்தியாளர்** - கடந்தமுறை பிரதமர் அவர்களை சந்தித்த போது அவரது அணுகுமுறை எப்படி இருந்தது, இந்த முறை சந்தித்த போது அவரது அணுகுமுறை எப்படி இருந்தது? கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தாரா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - அவர் பிரதமராக சந்தித்தார். நான் முதல்வராக சந்தித்தேன், அவ்வளவுதான். அனைத்து கோரிக்கைகளையும் பொறுமையாக கேட்டறிந்தார். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், 15 நிமிடம் தான் நேரம் ஒதுக்கப்பட்டது. ஆனால், சுமார் 45 நிமிடங்கள் வரை பேசியிருக்கிறோம். இதிலிருந்து சந்திப்பு எப்படி இருந்தது என்பதை நீங்கள் அறியலாம்.

**செய்தியாளர்** - தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து....

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - அது தொடர்பாக பிரதமர் அவர்களிடம் விளக்கமாக கோரிக்கை மனு கொடுத்திருக்கிறோம். துறையினுடைய அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களிடத்திலும் பேசியிருக்கிறோம்.

**செய்தியாளர்** - புதிய கல்வி கொள்கை பற்றி நீங்கள் பேசியிருக்கிறீர்களா. கையெழுத்து போடுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறதா. பிரதமர் அதற்கு என்ன பதில் சொல்லியிருக்கிறார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - பிரதமர் அவர்கள் கலந்துப் பேசி சொல்வதாக கூறியுள்ளார்.

**செய்தியாளர்** - முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி நேற்று ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - நான் தான் நேற்றே சொல்லியிருக்கின்றேனே. துணிச்சலோடு இருந்திருக்கிறார். அவரின் துணிவை நாங்கள் பாராட்டுகிறோம். நிச்சயமாக வரக்கூடிய காலக்கட்டத்தில் நீதிமன்றத்தில் போராடி அவர் விடுதலை பெறுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கும் இருக்கின்றது. அவருக்கும் இருக்கிறது.

**செய்தியாளர்** - பிரதமருடனான இன்றைய சந்திப்பு மகிழ்ச்சியாக இருக்கிறது என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். ஆனால், ஒன்றிய அரசின் செயல்பாடுகள் அப்படி இருக்கிறதா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - நாங்கள் எங்கள் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல், எங்களது கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். கொள்கையை எப்போதும் விட்டுக்கொடுக்க மாட்டோம், அதில் நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம். அதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

**செய்தியாளர்** - திருமதி சோனியா காந்தி அவர்களை சந்தித்தது தொடர்பாக...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினேன்.

**செய்தியாளர்** - காவிரி விவகாரம் குறித்து தமிழ்நாடு மற்றும் கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களை ஒன்றிய அரசு பேச்சு வார்த்தைக்கு அழைத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்களே...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - ஏற்கனவே, அது நீதிமன்றத்தில் இருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

---

## செந்தில் பாலாஜி

## நீதிமன்றத்தில் போராடி விடுதலை பெறுவார்!



**செய்தியாளர்** - முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி நேற்று ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - நான் தான் நேற்றே சொல்லியிருக்கின்றேனே. துணிச்சலோடு இருந்திருக்கிறார். அவரின் துணிவை நாங்கள் பாராட்டுகிறோம். நிச்சயமாக வரக்கூடிய காலக்கட்டத்தில் நீதிமன்றத்தில் போராடி அவர் விடுதலை பெறுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கும் இருக்கின்றது. அவருக்கும் இருக்கிறது.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - பிரதமரிடம் நேரில் வலியுறுத்தல்

**முதல் பக்கத் தொடர்ச்சி**

ஏற்கெனவே சமக்ரசிக்ஷா திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் திட்ட பணிகளுக்கானநிதியினைஉடன்விடுவித்திடுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**3. இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை பாதுகாக்கவும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி கலன்களை விடுவிப்பதற்கும் நிரந்தர தீர்வு ஏற்படுத்துதல்.**

தமிழ்நாடு 1076 கி.மீ. நீளம் கொண்ட கடற்கரையையும், வாழ்வாதாரத்திற்காக மீன்பிடிப்பை தொழிலாக கொண்டுள்ள மிகப்பெரும் கடலோர சமுதாயத்தையும் கொண்டுள்ளது. சமீப காலமாக அடுத்தடுத்து இந்திய மீனவர்கள் மீன்பிடி கலன்களுடன் இலங்கை அரசால் கைது செய்யப்படுகின்றனர். நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் இந்தப் பிரச்சினையின் காரணமாக தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஏழை மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டுக்கு பிறகு சிறைபிடிக்கப்பட்ட 191 மீன்பிடி படகுகளின் தற்போதைய நிலை இதுவரை அறியப்படாமல் உள்ளதால் அலுவலர்கள் மற்றும் மீனவர்கள் அடங்கிய குழு படகுகளை ஆய்வு செய்ய அனுமதியினை பெற்றுத் தருமாறும் ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அண்மை காலத்தில் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை நாட்டுடமையாக்கப்படும் கொள்கையால், இலட்சக்கணக்கான தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் குடும்பங்களின் எதிர்காலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் ஏழை மீனவர்கள் மீது இலங்கை நீதிமன்றங்கள் மிக மிக அதிகப்படியான அபராதத் தொகையினை விதித்து வருகிறது. எனவே, இதனை அரசாங்க ரீதியிலான பேச்சு வார்த்தை மூலம் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்திய இலங்கை கூட்டு பணிக்குழு கூட்டம் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதி கொழும்புவில் நடைபெற உள்ளதாக அறியப்படுகிறது. எனவே, 2016 ஆம் ஆண்டுக்கு பிறகு இரு நாட்டு மீனவர்கள் இடையே பேச்சுவார்த்தை நடைபெறாத நிலையில், இக்கூட்டத்தினையும் உடனடியாக கூட்டிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் மனுவில் கோரிக்கை வைத்துள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் இந்த முக்கிய பிரச்சினையில் இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு நிரந்தர தீர்வு காணுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அத்துடன் கைது செய்யப்பட்டுள்ள 145 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தனது மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடமிருந்து கோரிக்கை மனுவினைப் பெற்றுக் கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், மேற்படி கோரிக்கைகள் குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.



சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கூட்டரங்கில், 26.09.2024 அன்று திருச்சி மண்டலப் பொதுப் பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் குறித்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறையில் மூன்று நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்வின் போது, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம்சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.